# Issue 34

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**
**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# பரிசுத்தத்துக்கு வழி



*"இன்றைய உலகை ஒருவித கலாச்சார மாற்றம் மேற்கொண்டு விட்டது. நம்பிக்கைகள், நன்னெறி மதிப்புகள், சமுதாயத்தின் வாழ்க்கை முறை போன்றவை களில் குறிப்பிட்ட மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. முக்கியமாக ஒழுக்க நெறிகளில் மோசமான மாற்றம் மக்களைச் சீர்குலைத்து வருகிறது. "1960 களில் மதம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த மனப்பான்மைகள் துரித கதியில் இறந்துபட்டன. அதன் விளைவு ஆபத்தான வறுமை -எதில்? ஒழுக்கத்தில், நன்னெறியில்! -எங்கு? சமுதாயங்களில்"* என்று ஒரு எழுத்தாளர் சரியாகவே கூறினார்.

அப்போதிலிருந்து மக்கள் சமுதாயம் அசுரவேகத்தில் தலைகீழாகப் போய்க்கொண்டே இருக்கிறது. நோவாவின் காலத்தில் பெருவெள்ளம் வந்ததை நினைப்பூட்டும் வகை யில், மக்களின் சீர்கேடு அந்த நாட்களின் சீர்கேட்டிற்கு ஒத்ததாயிருக்கிறது. *"பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார் கள்"* (ஆதியாகமம் 6:11-12).

இந்தச் சமுதாயச் சூழலிலே தான் நம்மில் பெரும்பாலானோர் வளர்ந்து வந்தோம் - நம் பிள்ளைகளைச் சுற்றியும் அதே நிலைமைத் தான் காணப்படுகிறது. அழிவை எதிர்நோக்கியிருக்கும் உலகம் இது. பவுல் அப்போஸ்தலன் அதை இவ்வாறு விவரிக்கி றார்:

*"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்". அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்கள் எல்லாரி டத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராகவும் வருவார்.."* (2.தெசலோனிக்கேயர் 1:7-9)

பேதுருவால் கொடுக்கப்பட்ட புத்திமதியையும், வேதம் பொதுவாக நமக்குக் கூறுவதை யும் பின்பற்றாவிடில் இன்னும் மோசமான நிலைமைக்குப் போவோம்.

இன்றைய உலகத்தைப் பொல்லாத கலாச்சாரம் எனக் கூறலாம். அது

மனித நலக் கொள்கை. மனித ஒழுக்கநெறி, மற்றும் மனித நலம் பேணும் கொள்கையால் ஆளப்ப டுகிறது. இவை நம்மைப் படைத்தவரின் எண்ணத்திற்கு மாறுபட்டவை. ஏசாயா தீர்க்கதரிசி மூலம் தேவன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

*"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது"* (ஏசாயா 55:8-9).

ஆண்கள், பெண்களுடைய (மனிதருடைய) அளவுகளைக் காட்டிலும் வித்தியாசமான அளவுகளின் தொகுப்பு இங்கே கொடுக்கப்படுகிறது. அவை உயர்ந்தவை. பரத்திலிருந்து கொடுக்கப்பட்ட அந்தச் செய்தி வேதாகமம் தான். தேவனுடைய வார்த்தை சில காரியங்கள் தவறு என்று கூறுவதால் அதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறது. மேலும், நாம் நன்கு பிரயாசப்பட்டு வாழவேண்டிய "உயர்ந்த" கொள்கைகள் உள்ளன என்று கூறுவதோடு, அக்கொள்கைகளின் தன்மையைப் 'பரிசுத்தம்' என விளம்புகிறது.

பேதுரு அக்காலத்திலிருந்த மக்களை, *"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளும்படி"*யும் (அப்போஸ்தலர் 2:21) *"இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளவேண்டும்"* என்றும் (அப்போஸ்தலர் 2:38) வருந்தி அழைத்தார். இது ஏதோ அடையாளத்திற்காக ஜான், மைக்கேல் என்ற வைக்கப்பட்ட பெயர் அல்ல -அது மதிப்பானது. வேதத்தில் 'நாமம்' என்பது எதற்கு அல்லது யாருக்கு அந்த நாமம் வைக்கப்பட்டதோ, அவரை விவரிப்பதாகும்.

ஆகவே, நாம் அப்போஸ்தலர் 15:14.ல், *"தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற் காக ஒரு ஜனத்தைத் தெரிந்துக் கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித் தருளின"* விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. தாங்கள் வாழும் உலகி னின்று விசுவாசிகள் பிரிந்து, உலகை விட்டு, விலகிவர வேண்டும்.

## உமது நாமத்தால் பரிசுத்தமாக்கப்படுதல்

இன்றைய உலகத்தோடு விசுவாசிகள் இணைந்து செல்லமுடியாது. யோவான் 17:11.ல் இயேசு, *"பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும் படிக்கு நீர் தந்தவர்களை உம்முடைய 'நாமத்தினாலே காத்துக்கொள்ளும்"* என்று ஜெபித்தார்.

*"நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன். நான் உலகத்தானல் லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்".*



இந்த வசனங்களில் இயேசு என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனமாய்ப் பார்த்தால் கீழ்க்கண்ட குறிப்புகள் தெளிவாகின்றன:

"விசுவாசிகள் தங்களை ஒருமனப்படுத்துகிற பரிசுத்த நாமத்தில் இருக்கவேண்டும்.- கிறிஸ்துவும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல (வசனம் 11).

வார்த்தையின் தாக்கம் எப்படியிருக்குமென்றால், அவர் நாமத்தைச் சுமக்கிறவர்களை உலகம் ஒதுக்கித் தள்ளும் (பகைக்கக்கூட செய்யும்) -அது கிறிஸ்துவைப் பகைத்து புறம்பே தள்ளியது போல (வசனம் 14).

விசுவாசிகள் தங்களை ஒரு மடத்தின் சுவர்களின் பின்னால் வைத்துக்கொள்வது கர்த்தரின் சித்தமல்ல; நோக்கமல்ல. ஆனால் உலகத்தின் தீமையினின்று பிரிந்திருக்க வேண்டுமென்றார். (வச-15,1;யோவான்.2:15-16 வாக்கியங்களை வாசிக்க). கிறிஸ்துவின் முன்மாதிரி தான் நம் வழிகாட்டி- (வச-16) (எபிரெயர் 7:26 வாசிக்கவும்).

விசுவாசிகள் மீது சத்தியத்தின் செல்வாக்கினால் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். சத்தியம் என்பது தேவனுடைய வார்த்தை. இப்படி சத்தியத்தை விசுவாசிக்கிறவர்கள் பரிசுத்த தேவனின் நாமத்தில் ஒன்றாகிறார்கள் (எபேசியர் 3:14-15)

## அறிவு அவசியம்

சத்தியம் தன் வேலையைச் செய்யவேண்டுமெனின் அது புரிந்துணர்ந்து கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய வழிகளும் அளவுகளும், நம்முடைய வழிகளைவிட 'உயர்ந்தவை' என்பது மட்டுமல்ல - அவருடைய அளவு தான் ஒரே அளவு. *"நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்"* என்று தேவன் கூறும்போது, அவர் எதை "அசுத்தமானது" என்கிறாரோ அது அசுத்தமானது தான். எந்த அசுத்தமானதைத் தொடக்கூடாது என்கிறாரோ, அந்த அசுத்தமானதைத் தொடக்கூடாதுதான். நம் மனித அபிப்பிராயமோ, உணர்வோ அங்கு கணக்கி லெடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

ஆகவே, தேவன் என்னென்ன கட்டளையிட்டிருக்கிறாரென நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படியென்றால், அதைக்கண்டுபிடிக்கத் தேவையான நேரம் செலவழிக்க வேண்டும். அவர் வார்த்தையிலுள்ள பொருளை அறிந்துகொள்ளவேண்டும். வேதாக மத்தில் என்ன இருக்கிறது என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

தேவன் என்ன கூறியிருக்கிறார் என்ற அறிவும், அவர் என்ன கட்டளையிட்டிருக்கிறார் என்ற அறிவும் பரிசுத்தத்திற்கான முதல்படி தான். கடினமான பகுதி கீழ்ப்படிதல் சொன்னதை, கட்டளையிட்டதைச் செய்வது. தேவன் சொன்னதை நாம் தெரிந்து அதை விசுவாசிக்கவேண்டும். சத்தியவார்த்தையைப் பற்றிய அறிவு நம்மைத் தேவனு டைய பரிசுத்த நாமத்தோடு ஒன்றாக்கும். ஆனால், அறியாமையோ தேவனுடைய ஜீவனுக்கு நம்மை அந்நியராக்கும் (எபேசியர் 4:17-18). எபேசியர் 4:21-24.ல் கூறப்பட்

டுள்ள தொடர் நிகழ்வுகளைப் பாருங்கள்.

*"இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே, அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துப்போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்* (எபேசியர் 4:21-24).

## உலகின் சக்தி

உலகத்தின் செல்வாக்கு வல்லமையுள்ளதும் பலமானதும் ஆகும் - அதனால் சிலர் மேற்கொள்ளப்படும் அளவிற்கு வல்லமையுள்ளது" உலகத்திலுள்ளவைகளுக்கு (1.யோவான் 2:16) எதிரான போராட்டத்தில் பெலவீனமான மனுஷ சுபாவம் எப்படி வெற்றிபெறக் கூடும்? மாம்சத்தின் இச்சைக்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் எதிரான போராட்டம்.

ஒரு எழுத்தாளர் இப்படி எழுதுகிறார்.

"ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பருவமடையும் வயது எய்தியதும், அவர்கள் கண்கள் திறக்கப்படுகின்றன; நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கி றார்கள். இயற்கையின் அந்த மாற்றத்திற்கு முன் களங்கமற்ற பருவத்தில் இருக்கிறார் கள். ஆனால், அதற்கப்புறம் பழமரத்தில் சுற்றியிருக்கும் சர்ப்பத்தைப் போலுலகம்; மனதுக்கு முன் நின்று எடுத்துச் சாப்பிடு; நன்மையானவைகளை அனுபவி என மயக்கி இழுக்கிறது. இணங்கிக் கொடுப்பது சரியா, தவறா என யோசிப்பதே பாதி ஒத்துக்கொள்வது தான். உலகத்திற்கு ஒத்துப்போவதில் தீமை ஒன்றுமில்லை என்று ஆராய்வதோ, வாதிடுவதோ இருக்கக்கூடாது. வெளியே அதன் (உலகின்) மயக்கிக் கவரும் தன்மை, உள்ளே மாம்சத்தின் இரக்க உணர்வுகள் ஆகியவை உடனடியாக அடக்கப்பட வேண்டும். ஏனெனில் அதனோடு அமைதி காண தீர்வு பேச்சு பேசுவ தென்பது அபாயகரமானது. ஒருவன் பாவத்தின் வஞ்சனையினால் கெடுக்கப்படும் போது, *"அவன் தன் சுயஇச்சையினாலே இழுக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்.* வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், அவன் பறிக்கிறான், உண்கிறான், மன்னிக்கப்படாவிட்டால், மரிக்கிறான்":-எல்பிஸ் இஸ்ரேல் (1849).

சிறுமைக்குள்ளான இந்த நம் உடலிலே நாமெல்லாரும் தொடர்ந்து பரிபூரணமற்ற நிலைமையையே அனுபவித்து வருவோம். ஆனால் இது குறித்து நாம் சோர்ந்து போகக்கூடாது. பிலிப்பியர் 3:12-14.ல் பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு எழுதுகிறார். *"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன்; பின்னானவை களை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்"* (பிலிப்பியர் 3:12-14).

அது ஒரு உன்னத அழைப்பு; ஓய்வு ஒழிவு இல்லாத தீர்மானத்தோடு கூடிய முயற்சி கொண்டு கீழான சுபாவத்தின் தூண்டல்களுக்கு விரோதமாகப் போராட, எதிர்பார்க்கும் அழைப்பு! பவுல் அதை 'அற்பமான சரீரம்' என்றார்.

## இதுவே வெற்றி

தேவனுடைய வார்த்தையை அறிந்திருப்பதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தி வந்துள்ளோம். அது விசுவாசத்தையும் தேவன்பேரில் நம்பிக்கையையும் உண்டாக்கும். "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).

ஆகவே வேதவாக்கியத்தின்படியான விசுவாசம் சத்திய வார்த்தையைப் புரிந்துணர்ந்து கொள்வதினால் வருகிறது வேறு எந்த வழியிலும் வருவதில்லை. இவ்வுலகத்தின் பொருள்கள் காரியங்களின் மீதுள்ள ஆசை அந்நியமாய்ப் போய்விடுமளவிற்கு அந்த விசுவாசம் மனதில் கிரியைச் செய்கிறது. உடனடியாக இல்லை. ஆனால் ஒழுங்காக, ஆர்வம் குறையாமல் அதை (விசுவாசத்தை) அப்பியாசிப்பதால் கிரியை செய்கிறது.

சத்திய வார்த்தையானது சுபாவ இச்சைகளைப் போராடி வெல்வதற்கான விருப்பத்தை யும் மனத்திண்மையையும் ஒரு மனிதனில் உண்டாக்குகிறது. ஆகவே அவன் நீதியின்மேல் பசி, தாகம் உள்ளவனாகிறான் (மத்தேயு 5:6) இவ்விதமாக அவன் சத்திய வார்த்தையினால் பரிசுத்தமாக்கப்படுகிறான் (யோவான் 17:19). 'பரிசுத்தமாகு தல்' என்ற வார்த்தைக்கு 'ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தனியே பிரித்தெடுக்கப் படல்' என்று பொருள்.

இது இப்படியிருக்க வேதாகமம் கூறுகிறது: *"நம் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."*

நியாயப்பிரமாணமும், சாட்சியும் பரிசுத்தம் மற்றும் சுத்திகரிப்புக்கான உபகரணங்கள். அவை மக்களின் மனதை மாற்றுகின்றன. பூமியிலுள்ளவைகளின் மேலுள்ள பிடிப்பைத் தளர்த்துகிறது. மேலானவைகளின் மேல் தங்கள் வாஞ்சையை, ஆசையை வைக்கச் செய்கிறது. நம்முன் புதியதும், செம்மையானதுமான ஆவியை உருவாக்கு கிறது. தேவஅன்பை நம்முன் ஊற்றி நமக்குள் பரவச்செய்கிறது; பாவிகளிடமிருந்து மக்களைப் பிரிக்கிறது; கிறிஸ்துவுக்கு நேராக நடத்துகிறது; மறுபடியும் மனஸ்தாபப்படு கிறதற்கு இடமில்லாத மனந்திரும்புதலுக்கேற்ற கனிகொடுக்கும் தன்மையை அவர்கள் வாழ்க்கையில் வளர்க்கிறது. இயேசு அதை ***"ராஜ்யத்தின் வசனம்"*** என்கிறார்.

பேதுரு ***"அழிவில்லாத வித்து"*** என்கிறார். பவுல் ***"சத்திய வார்த்தையாகிய சுவிசேஷம்"*** என்கிறார். யோவான் ***"தேவனுடைய வித்து"*** என்கிறார். யாக்கோபினால் ***"சத்திய வசனம்"*** எனக் கூறப்படுகிறது.

அந்தச் *"சத்திய வசனத்தினாலே யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லாத ஜோதிகளின் பிதா தம் மக்களைத் தம்முடைய சிருஷ்டிகளில் முதற்பலனாவதற்கு ஜெநிப்பித்தார்.* இந்ச வசனத்தினாலே ஒருவன் புதுப்பிக்கப்பட்டு அறிவுபூர்வமாகவும், ஒழுக்கநெறியிலும், ஒரு புதிய மனிதனாகிறான். இதை அப்போஸ்தலன் கொலோசெயிலுள்ள சகோதரருக்குக் கூறுவதில் காணலாம். *"பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக் கிறீர்களே"* இந்தப் புதிதாக்கப்பட்டதால் மனிதனின் ஆவியை மாற்றுகிறது. மாம்சத் தின் இச்சைக்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும்" சுபாவத்தின் படி அடிமைத்தனத்திலிருந்தவன் "நீதிக்கும் மெய்யான பரிசுத்தத்திற்கும் திரும்பியவனாகிறான்"

## நாம் பரிசுத்தமாக்கப்படுதல்

தற்போது, தேவன் நம்மிடத்தில் தொடர்பு கொள்ள தெரிந்துகொண்ட சாதனம், முறை வேதாகமம் என்பதை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அச்சடிக்கப்பட்ட எழுத்தைக் காணலாம் அல்லது ஒருவர் வாசிக்கக்க் நிற்கும் ஜீவிக்கிற கிறிஸ்துவின் மூலமாய்த் தேவன் இப்பொழுது பேசுகிறார் (எபிரெயர்.1:1,2). அவருடைய பிரசன்னத் தைக் குறித்த உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். வசனங்களில் அவர் சத்தத்தைத் கேட்கிறவர்களாய் இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல. நாம் அவரை அறிந்துக்கொண்டு, அவரை நேசிக்கவேண்டும். அதை நாம் எப்படிச் செய்யமுடியும்? நன்கு அறியப்பட்ட எழுத்தாளரும் வெளியீட்டாருமான ஒரு கிறிஸ்டஃடெல்பியனின் மனைவி கீழ்க்கண்ட வாறு எழுதுகிறார்.

"நீ கிறிஸ்துவை நேசிக்க விரும்புகிறாய்; அவரை நேசிக்கவேண்டுமென்பதும் உனக்குத் தெரியும். ஆனால் உன் அன்பில் ஒரு குறைவு இருக்கிறது. உனக்குத் தெரிகிறது. அதன் தொடர்ச்சியாக அவரைச் சந்திப்பதற்கு எல்லாம் சரியாயில்லியே என்ற பயம் வருகிறது. நல்லது, தேவையான முதல் காரியம் என்னவெனில் உன் அன்பைப் புதுப்பிக்க அல்லது அனல்மூட்டி எழுப்ப அவரைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வது அல்லது அவரைப் பற்றிய உன் அறிவை புதுப்பித்துக்கொள்வது. அவரண்டை இன்னும் கிட்டிச்சேர். அவருக்கும் உனக்கும் இடையிலுள்ள உறவு என்ன என்பதை உணர்ந்துக்கொள். அவருடைய அன்பு பூரணமானது. அவரில் குறைவு ஏதும் இல்லை. குறைவும் தவறும் உன்னில் தான் உள்ளது. அவர் உன்னை நேசிக்கிறார். தமது வருகையின் போது உன்னைக் குறைவற்ற, பூரணமாக மணவாட்டியின் ஓர் உறுப்பாக கறை திரையற்றதாக அல்ல. வேறு எந்த குறையும் இல்லாதவனாக நிறுத்த விரும்புகிறார்.

அவரைப்போலவே -மகிமையுள்ளதும் அழியாததுமான நிலையில் உன்



சமுதாயம் இருக்கவேண்டுமென விரும்புகிறார். உன்னுடைய பாவங்கள் மற்றும் குறைபாடுகளுக் காக மன்னிப்பைப் பெற, உனக்காக மன்றாட இப்பொழுது அவர் தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர் உன்னிடத்தில் கேட்பதையெல்லாம், நீ என்னவாக வேண்டுமென வாஞ்சிக்கிறார் என்பதை, அவர் இல்லாதபோது நீ எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்பதையெல்லாம் எழுதப்பட்ட வாக்கியங்களாக உனக்கென வைத்திருக்கிறார். எதற்காக என்றால் எதிர்வரும் யுகத்தில் ஆளுகையின் போது ஒரு கனமான இடத்திற்கு நீ தகுதியுள்ளவனென்று எண்ணப்படுவதற்காக,

இத்தகைய எதிர்காலம் உனக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக, தன் உயிரை ஈந்தது மட்டுமல்லாமல் இவ்வளவு அவர் உன்மேல் அக்கறை காட்டுவது, உன் பக்கத்தில் பலமான அன்பை எழுப்பி தினந்தோறும், ஏன் ஒவ்வொரு மணிநேரமும் "ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? உம்மீது நான் கொண்டுள்ள அன்பை எப்படிக் காட்டவேண்டும்?" எனக் கேட்கவேண்டும் என்பதற்குத் தான். உன் கேள்விக்கான பதில் உனக்கு வழிகாட்டியான வேதம். வேதவாக்கியங்களெல்லாம் இந்த நோக்கத்திற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கான உன் சேவை யில் எந்த அளவிற்கு ஊக்கமும் வாஞ்சையுமாயிருக்கிறாயோ, எந்த அளவிற்கு நீ உண்மையாக அவரை நேசிக்கிறாயோ, அந்த அளவிற்கு நீ உண்மையான கருத்துடன் எழுதப்பட்ட வழிகாட்டியான அவருடைய வார்த்தையை, அவருடைய சித்தத்தை அறிந்துக்கொள்வதற்காகப் படிப்பாய். அவர் சித்தத்தை அறிவதோடு அதன்படி செய்வதிலும் அக்கறை காட்டுவாய். கிறிஸ்து உனக்கென்று கொண்டிருக்கும் அன்பை எந்த அளவிற்கு விளங்கிக் கொண்டாயோ, அந்த அளவிற்கு நீ அவர்மேல் கொண்டி ருக்கும் அன்பு தூண்டப்படும்.

"நாம் அவரில் அன்பு கூருகிறோம். ஏனெனில் அவர் நம்மில் முந்தி அன்புர்கூர்ந்தார்". உங்கள் அன்பினால் அசைக்கப்பட்டவர்களாய், நெருக்கப்பட்டவர்களாய், உங்கள் விருப்பத்திற்கு மாறாகக் கூட அவர் ஆணைப்படி செயலாற்றி முடிப்பீர்கள்

நாம் தேவன்மீது விசுவாசத்தை வளர்த்துக்கொண்டால் முடியாத காரியம், நம் சக்திக்கு மிஞ்சியது' என்று நினைப்பவை கூட வெற்றிகரமாக நிறைவேறும். ஆகவே பேதுரு சொல்லுவது போல்

.' *நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாய் இருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியா மையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகை யால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'* என்று எழுதியிருக்கிறதே " (1.பேதுரு 1:13-16).

பேதுருவால் கொடுக்கப்பட்ட புத்திமதியையும், வேதம் பொதுவாக நமக்குக் கூறுவதை யும் பின்பற்றாவிட்டால் இன்னும் மோசமான நிலைமைக்குப் போவோம். **- ஜேன் ராபர்ட்ஸ்**

# திருமணமும் குடும்ப வாழ்க்கையும்

திருமணம் என்பது இயேசுகிறிஸ்துவுக்கும் மணவாட்டியான திருச்சபைக்கும் உள்ள ஆவிக்குரிய உறவை மேன்மையாக எடுத்துக்காட்டும் அருமையான உதாரணமாகும்: *"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்துக்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.*

*"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனைத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத் தார்.*

*"அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.*




*"இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவன்"* (எபேசியர் 5:22-33).

திருமணம் தன்னில்தானே முடிவானதாக இருக்கும்படி தேவன் ஒருபோதும் எண்ணவில்லை. பதிலாக, அது கிறிஸ்துவுக்கும் மணவாட்டியான திருச்சபைக்கும் உள்ள உறவின் "மாதிரி"யாக இருக்கும்படிக்குத் தேவன் அதை நியமித்தார். உங்களது திருமண உறவைப் பிறர் காணும்போது அதைக் கவனிக்கிறீர்களா? அங்கு கிறிஸ்து வின் தலைமையைக் கணவனின் தலைமையிலும், திருச்சபையின் கீழ்ப்படிதலை மனைவியின் பணிவிடையிலும் காணமுடியுமா? அதில் மனைவி போஷிக்கப்பட்டு அன்பைப் பெறுகிறாள் ஏனெனில் அவள் பரிசுத்தமும் களங்கமற்றவர்களுமாக இருக்கிறாள்.

இந்த மேன்மையானது, நம்மைச் சுற்றியுள்ள உலகத்தார் திருமண முறிவில் காணும்போது தெளிவாக அதை அறியமுடிகிறது. மேல்நாடுகளில் விவாகரத்து அதிகரித்துக் கொண்டு வருகின்றன. கல்வியாளர்களும் மனோதத்துவ ஆலோசகர் களும் முறிந்த உறவுகளின் தகவல்களைச் சேர்த்து கையாளுகின்றனர். இந்தப் பணி அனுதினம் கூடிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட வீடுகளில் வளரும் பிள்ளைகளின் கல்வி பிரச்சனை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. சிலர் சிறப்பு கல்வி நிலையங்களில் தஞ்சம் புகுந்து விடுகின்றனர். பிறர் மதுவுக்கும், போதை மருந்துக்கும் அடிமைகளாகி மோசமடைகின்றனர்.

இப்படிப்பட்ட பலன்களுக்குக் காரணம், உலகம் தேவனை அறியாமலிருப்பதேயாகும். ஒரு சீஷனுக்கு அதைவிட சிறப்பான வழி உண்டு. ஏதாவது நல்லது கிடைக்கும் வரைக்கும் திருமணம் இடத்தை நிரப்பும் என்பது தவறு. கடந்தகால தவறுகள் எத்தனையாக இருந்தாலும் திருத்தலாம். அவை ஒருவகையாக திருந்தலாம். ஆனால் பணிகளை அல்லது கார் வியாபாரத்தில் வாகனங்களை மாற்றுவதுபோல திரும ணத்தை மாற்ற இயலாது. அது ஆயிரங்கால பயிர், வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டியது.

*"மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்"* (1.கொரிந்தியர் 7:39).

இதினிமித்தம் திருமணத்தைச் சுலபமாக எடுக்கக்கூடாது. அது வாழ்நாளுக்கும் பொறுப்பேற்கும் ஒன்றாகும்.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவானது திருமண மாதிரியில் நன்னடத்தையை வலியுறுத்துகிறது. கிறிஸ்து திருச்சபையைக் காட்டிக் கொடுப்பாரா? திருச்சபை அவரை நம்பாதபடிக்கு அவர் உண்மையில்லாதவரா? உண்மையான பத்தினி வேறொருவனை சுவீகரிப்பாளா? திருச்சபை அவிசுவாசமாக நடந்தாலும் கிறிஸ்து தொடர்ந்து சபையின் நல்வாழ்வுக்கென்று முயற்சி எடுக்கிறார். உண்மையான திருச்சபை தொடர்ந்து அவருக்கு விசுவாசமாக இருக்கிறது.

நாம் முயன்று எட்டிப்பிடிக்கக் கூடிய ஒரு இலக்கைத் தேவன் முன்மாதிரியாக வைத்து அதைப் பின்தொடரச் செய்கிறார். ஒருவர் மற்றவரின் நலனைக் கருதவும், மற்றவரின் கட்டுப்பாட்டுக்கு ஒருவர் அடங்கியிருக்கவும், தேவபயம் நிறைந்த ஒரு குடும்பத்தை வளர்க்க நோக்கம் கொள்ளவும் அவர் திட்டம் வைத்துள்ளார். சரீர ஐக்கியம் மூலமாக, சகல பரிசுத்தத்துடனும் தாழ்மையுடனும் நாம் இருப்பதை அவர் எதிர்பார்க்கிறார். அந்த ஐக்கியம் அவர் தமது ஒரே

பேறானவருடன் வைத்திருந்த ஐக்கியத்தின் அழகைப் பிரதிபலிக்கிறது.

தேவனுடைய கண்ணோட்டத்தைப் பாராட்டும்போது, இந்த விஷயத்தில் நமது மனதின் நிலமைக் குறித்த அவருடைய கரிசனைத் தெரியவருகிறது. உலகப் பொரு ளுக்கடுத்த நமது சிந்தனைகள் விக்கிரகாராதனையாகிய பொருளாசை என்றழைக்கப் படுகின்றன (கொலோசெயர்-3:5). அதைப்போன்ற விவாக உறவில் வேறொரு சரீரத் தைத் தேடி அலைவது விபசாரம் என்றழைக்கப்படுகிறது (மத்தேயு-5:28). நமது இருதயம் சரியான விதத்தில் எண்ணி, நமது அகப்பார்வ மேலான நோக்கத்தைக் கொண்ட முன்மாதிரியைப் பின்தொடர்ந்து வஞ்சிக்க வேண்டும். இந்து நாம் குறிப்பிடுவது, உள்ளான நோக்கம் வெளிப்பார்வையை விட மேலானது. அது திருச் சபை தீர்ப்பிற்கு மேலான கவனத்துடன், கண்காணிக்கப்பட வேண்டும், புறம்பான பயத்தினால் அல்லது பொருளாதார நெருக்கடிக்குப் பயந்து அல்ல. ஒழுக்கமான நடவடிக்கை என்பது நமது எண்ணங்களையே ஆட்கொண்டு தெளிவுடன் நடப்பது ஆகும். இந்தவிதமான ஜீவியம் வாழ நாம் எடுக்கும் விடாமுயற்சியானது, கிறிஸ்து வுக்கும் திருச்சபைக்கும் நடுவில் உள்ள உறவை பிரதிபலிக்கிறது.

**“ஸ்திரீயானவள் மனிதனின் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டாள்...அவனுடைய தலையிலி ருந்து அல்ல -அவனை ஆளும்படி அல்ல, ஆனால் அவன் பக்கத்திலிருந்து -அவனுக்கு ஏற்ற துணையாயிருக்க, அவனுடைய புஜங்களின் கீழிருந்து -அவனுடைய பாதுகாப்பில் இருக்க, அவனுடைய இருதயத்தின் அருகிலிருந்து -அவனால் நேசிக்கப் படும்படி எடுக்கப்பட்டாள்”.**

## வேதாகம சத்தியத்துக்கான சான்று - காலத்துக்கு முந்திய மோசேயின் நியாயப்பிரமாணம்: காலத்துக்கு முந்திய பொதுவியல் வழக்கு சட்டம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஆதி இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட பொதுவியல் வழக்குக்கான சட்டத்தை இப்பகுதி காண்பிக்கப்போகிறது. பத்தொன்ப தாம் நூற்றாண்டில் தான் பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் நியாயப் பிரமாணத்திலுள்ளவைகளை கண்டுப்பிடித்து, அதன் கருத்துக்களை எடுத்துக் கையாள ஆரம்பித்தார்கள். இப்பொழுது நாம் “பொதுவியல் வழக்கும் சட்டமும்” பற்றி வேதாகமம் கூறும் எளிய ஆலோசனைகளைப் பார்ப்போம். அவைகளைப் பயன்படுத்தி நாம் நம் உலகில் இன்றுள்ள அநேக பிரச்சனைகள் குறைந்துபோகும்.

**காலத்துக்கு முந்திய ஒரு பொதுவியல் வழக்கு சட்டம்**

உலகைச் சீராகக் கொண்டுசெல்ல, நாம் மோசேயின் சட்டம் மற்றும் விதிகளைப் பயன்படுத்தியிருந்தால், நவீன உலகத்தின் அநேக பிரச்சினைகள் தடுக்கப்பட்டிருக்க லாம். நாம் ம்கொள்கைகளைப் பார்த்தாலே போதும்.



நியாயப்பிரமாணம் எவ்வளவு ஞானம் நிறைந்தது என நாம் காணலாம்.

**அ) செல்வம் சமமாகப் பங்கிடுதல்**

மோசேயின் காலத்தில் நிலம் செல்வமாக கருதப்பட்டது. தேசம் பிரிக்கப்படும்போது மோசேக்குச் சொல்லப்பட்டது

*“சீட்டுப்போட்டு தேசத்தை உங்கள் குடும்பங்களுக்குச் சுதந்திரங்களாக பங்கிட்டு, அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்சம் ஜனங் களுக்கு கொஞ்சம் சுதந்தர மும் கொடுக்கக்கடவீர்கள்”* (எண்ணாகமம் 33:54).

தேசத்தின் செல்வம் சமமாக பங்கிடப்படவேண்டும். ஆனால் தனிப்பட்ட குடும்பங்கள் பல்வேறு காரணங்களால் கடன்பட்டு ஏழைகளாவதைத் தவிர்க்க முடியாது. அப்போது அவர்கள் கடன் வாங்கவேண்டும், அல்லது நிலத்தின் ஒரு பகுயை விற்க வேண்டும்.

யூபிலி ஆண்டின் (**50**-ம் ஆண்டு) சட்டப்படி அவர்கள் தங்கள் நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

*“அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பி போகக்கடவன்”* (லேவியராகமம் 25:13)

இந்தச் சட்டம் குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கள் நிலத்தை இழந்துவிடாதபடி தேவன் ஞானமாக கொடுத்த சட்டமாகும்.

அந்த நிலத்தை விற்பதனால் கிடைக்கும் பணம், அடுத்த யூபிலி ஆண்டு வருவதற்கு எத்தனை ஆண்டுகள் இருக்கின்றன என்பதைப் பொறுத்தது. யூபிலி ஆண்டில் நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, திரும்பத் தமது வாழ்க்கையைத் தொடங்குவார்கள்.

*“யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்க ளின் தொகைக்கேற்ப பிறனிடத்தில் கொள் ளுவாயாக பலனுள்ள வருடங்களின் தொகைக்கேற்க அவன் உன க்கு விற்பானாக. பல னுள்ள வருஷங்க ளின் இலக்கத்தை பார் த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்க ளின் தொகை ஏறி னால் விலை ஏறவும், வருஷங்களன் தொகை குறைந்தால் விலை குறையவும் வேண்டும்”* லேவியராகமம் 25:15-16.



செல்வம் கொழிக்கும் பெரிய குடும்பங்கள் பெரிய பண்ணைகளை வைக்காதபடி, ஏழைக் குடும்பம் நிலமே இல்லாமல் கடனைவிட்டு வெளியேறுவதற்கு ஏதுவாக, எதுவுமே இல்லாதபடியான நிலைமையை இந்தச் சட்டம் ஞானமாகத் தவிர்த்து விடுகிறது.

## காலத்துக்கு முந்திய சட்டம்

- செல்வம் சமமாகப் பங்கிடப்பட்டது.
- நில உரிமை மாற்றம் கட்டுப்படுத்தப்பட்டது.
- ஒரேயடியாய் செல்வம் மற்றும் வறுமை தவிர்க்கப்பட்டது.

## ஆ) ஓய்வுநாள்


மோசேயின் நியாயப்பிரமாணம் வாரத்தில் ஒரு நாளை ஓய்வுநாளாகக் கட்டாயப்படுத்துகிறது.

*“ஆறு நாளும் நீ வேலைச் செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்”* (யாத்திராகமம் 20:9-10)

மக்களுக்கும் சரி, மிருகங்களுக்கும் சரி ஒழுங்கான ஒரு ஓய்வுநாள் நன்மை தருகிறது. என நாம் இப்பொழுது கண்கூடாகப் பாற்கிறோம். இந்தக் கருத்து எந்தவகையில் அலட்சியம் பண்ணப்பட்டாலும் மக்கள் திறமையாக வேலைச் செய்யமுடியாது.

### காலத்துக்கு முந்திய சட்டம்

- வாரத்தில் ஆறு நாட்கள் மட்டுமே வேலைச் செய்யவேண்டும்.



## இ) குற்றவாளிகளை நடத்தும் விதம்

குற்றவாளிகளை நடத்தும் விதம்பற்றிய நவீன கருத்துக்களினின்று மோசேயின் விதிகள் முற்றிலும் வித்தியாசமானவை. அந்த நாட்களில் சிறைசாலைகள் கிடையாது. குற்றவாளிகள் தங்கள் செயல்களுக்குத் தாங்களே பொறுப்பானவர்கள்.

*“ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி, அதைக் கொன்றால். அல்லது அதை விற்றால், அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிலாகக் கொடுக்கக்கடவன்”* (யாத்திராகமம் 22:1).



திருடன் நஷ்டப்பட்டவனுக்கு இழப்பீடு செய்ய வேண்டும். அவன் திருப்பிக் கொடுக்கமுடியா விட்டால் என்ன செய்யவேண்டும் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது.

*“அவன் கையில் ஒன்றுமில்லாதிருந்தால், தான் செய்த களவுக்காக விலைப்படக் கடவன்”* (யாத்திராகமம் 22:3).

திருடன் வேலைக்காரனாக விற்கப்படுவதால் பொருளை இழந்தவனுக்கு இழப்பீடு செய்யமுடியும். திருடியதைத் திருப்பிக் கொடுக்கத்தக்கதாக, திருடன் வேலை செய்யவேண்டும். .திருடனை சிறையில் அடைப்பதைக் காட்டிலும் இது மிகவும் ஞானமுள்ள செயல் இதில் திருடன் சமுதாயத்திற்கு ஒரு பாரம், சுமை. பொருளை இழந்தவன் நஷ்டப்பட வேண்டியதாகிறது.

## காலத்துக்கு முந்திய சட்டம்

- குற்றவாளிகள் தங்கள் செயலுக்குப் பொறுப்பாவார்கள்.

| | |
|---|---|
| யாத்.**23:1** “அபாண்டமான சொல்லை ஏற்று கொள்ளாயாக. கொடுமையுள்ள சாட்சிக்காரனாய் இருக்க ஆகாதவனோடே கலவாயாக”. | |
| வ.**2**. “தீமைச் செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக”. | **2**. கூட்டங்கூட்டி வன்முறை இராது. திரளான மக்கள் கூடும்போதுதான் துன்பம் ஆரம்பிக்கிறது. |
| வ.**3** “வியாஜ்ஜியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக.” | **3**. எல்லாரும் சமமாக பாவிக்கப்படுவர். இன்றைய பல சட்டங்கள் செல்வந்தருக்கு சாதகமாக, பணம் செலவழித்து நீதிமன்றத்துக்கு செல்ல வழி உண்டாக்குகிறது. |
| வ.**4.** “உன் சத்துருவின் மாடாவது, அவனது கழுதை(ஆடு)யாவது தப்பிப்போகக் கண்டால் அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுப் போய் விடுவாய” | **4.** மக்கள் தாங்கள் வெறுக்கிறவர்களுக்கும் உதவுவார்கள். |
| வ.**5.** “உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை (வாகனம்) சுமையோடே விழுந்துக் கிடக்கக் கண்டாயானால் அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவி செய்வாயாக.” | **5.** மக்கள் தாங்கள் வெறுக்கிறவர்களுக்கும் உதவுவார்கள். |
| வ.**8.** “பரிதானம் வாங்காதிருப்பாயாக. பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் (குற்றமற்றவர்களின்) வார்த்தைகளைப் புரட்டும்.” | **8.** லஞ்சம் அனுமதிக்கப்படுவதில்லை. அதிகமான தீமைகள் லஞ்ச ஒழிப்பால் மறையும். |
| வ.**9**. அந்நியரை ஒடுக்காயாக. எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர்களே. | **9**. பிற தேச மக்களைப் பகைப்பது நின்று விடும். நம் உலகின் இன்றைய அநேகக் கஷ்டங்களுக்கு முகாந்திரம் இனவெறியின் விளைவுகளே. வஞ்சக பொய்யும் தடைசெய்யப்பட்டுள்ளன. |

- பொருள் இழந்தவனுக்கு இழப்பீடு செய்யப்பட வேண்டும்.
- குற்றவாளிகள் சமுதாயத்திற்கு பாரமாக மாட்டார்கள்.

**ஈ) பிறரைக் குறித்த சிந்தை**

*".உன்னில் அன்புகூர்வது போலப் பிறனிலும் அன்புகூருவாயாக"* (லேவியராகமம் 19:18)

மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள இந்த வாக்கியம் பிற சட்டங்களைக்காட்டிலும் வித்தியாசமாய் இருக்கிறது. மக்கள் பிறர்மேல் அக்கரை காட்டவேண்டும். மற்ற சட்டங்களெல்லாம், 'ஒருவரையொருவர் துன்புற்றுத்தக் கூடாது' என்பதோடு நின்று விடுகிறது. அதனால் சட்டங்களையும் விதிகளையும் வளைக்கவும் உடைக்க்வும் துணிவு கொள்ளும் மக்கள் சமுதாயத்தை உருவாக்குகிறது. அப்படிச் செய்கிறது தான் மக்களுடைய பழக்கமாய் இருக்கிறது. யாத்திராகமம் 23:1-9-யை ப்பின்பற்றினால், உலகம் இனிமையான ஓர் இடமாக மாறிவிடும்.

**காலத்துக்கு முந்திய சட்டம்:**

- வஞ்சகமும் பொய்யும் தடை செய்யப்பட்டுள்ளது.
- ஜனக்கூட்ட வன்முறை விலக்கப்பட்டுள்ளது.
- ஏழைக்கும் பணக்காரனுக்கும் சமமான ஒரே நீதி.
- பிறர் மேல் அக்கறை எப்போதும் காட்டப்பட வேண்டும்.
- லஞ்சம் அநுமதிக்கப்படுவதில்லை.
- இனப் பாகுபாடும் வெறுப்பும் அநுமதிக்கப்படுவதில்லை.

# குளிர்ந்த பாதங்கள்

## (தியானம்)

தன் பாதங்களைப் படுக்கைக்கு வெளியே தொங்கவிட்டவனாய்த் தூக்க முயன்றவனைப் பற்றிய கதை ஒன்றுண்டு அவன் பாதங்கள் எந்த அளவுக்குக் குளிர்ந்துபோயிருந்ததென்றால், அவை நீலநிறமாகவே மாறிவிட்டன. உன் பாதங்களை ஏன் போர்வைக்கு அடியில் வைத்துக்கொள்ளக் கூடாது," என்று கேட்டவரிடம், :அந்தக் குளிர்ந்த விஷயங்களையெல்லாம் என்னோடு படுக்கையில் வைத்துக் கொள்வதில்லை": என்று பதிலளித்தானாம். இது ஒரு வேடிக்கையான கதை.

பாதங்களும் நம் உடலோடு சேர்ந்தவை தாம். அவைகளுக்கு நடப்பது நமக்கு நடக்கிறது. சமீபத்தில் இதை நாங்கள் தத்ரூபமான செயல்முறையில் செய்து காட்டினோம். எங்கள் கால் பெருவிரலின் மீது ஒரு கனத்த பொருள் போடப்பட்டது. அதனால் ஏற்பட்ட வலி உடல் முழுவதும் உணரப்பட்டது. பின்னர் நாங்கள் தூங்குவதற்காகப் படுத்திருந்தபோது, எங்கள் கால் பெருவிரலில் உணரமுடிந்தது. சரீரத்தைக் குறித்துப் பவுல் கூறியதில் உள்ள சத்தியத்தை



எங்கள் வலியுடன் கூட உணர்ந்தோம். *"ஒரு அவயவம் பாடுபட்டால், எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்"*

எத்தனையோ ஆண்டுகள் எங்கள் கால் பெருவிரலைக் குறித்து நினைத்துப் பார்த்ததே கிடையாது. ஆனால் திடீரென்று அதைத் தவிர வேறு எதையும் நினைக்க முடியவில்லை. பவுல் சரீரத்தின் அங்கங்களோடு மிக அழகாக ஒப்பிடுகிறார். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் தேவையானது என்றும், ஒரு அவயவமும் இன்னொரு அவயவம் தனக்குத் தேவையில்லை. எனக் கூறக்கூடாது என்பதைக் காண்பிக்கிறார். *"சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது,"* எனப் பவுல் உரைக்கிறார்.



சரீரத்திலே பிரிவினை உண் டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்க வேண்டும்." என்று போதிக்கும் ஒரே நோக்கம் தான் பவுலின் இந்த விரிவான உவமைக்குக் கார ணம். நம் சொந்த சரீரத்தை நேசிப்பது போல, கிறிஸ்துவின் சரீரத்தை உண்மையாகவே நேசிக்கிறோமென்றால் நாமும் *"கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறது போல"* "நாமும் அதைப் போஷித்துக் காப்பாற்ற வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையிலே சுகவீனமாயிருக்கிற சரீரத்தின் (சபை) அவயவங்களைக் கவனித்துப் பராமரிப்பது தான் வழி என பவுல் கூறுகிறார். ஏனெனில் சுகவீனமான நம் உடலுக்கு என்ன செய்வது நாம் ஒவ்வொருவரும் அறிவோம்; இயேசு நமக்காக என்ன செய்தார் என்றும் அறிவோம். பவுல், *"பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்."* என நமக்கு அறிவுறுத்துகிறார்.

நமது காலில் பெருவிரல் வேதனை தரும்போது, நாம் இதைத்தான் செய்கிறோம். பொதுவாக ஒரு காலைக் கையில் பிடித்துக்கொண்டு நொண்டியடித்து அலைவ தில்லை. ஆனால் அந்தக் கால் பெருவிரல் சுகவீனமடையும்போது மட்டும், அப்படித் தான் செய்கிறோம். நாம் எவ்வளவு மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தாலும், ஒரு பாதநடனம் செய்யத்தான் செய்கிறோம்.

பிரச்சனை என்னவெனில், நமது பலவீனங்களைக் குறித்து நாம் உணர்வுள்ளவர் களாயிருப்பதுபோல பிறர் பலவீனங்களைக் குறித்தும் உணர்வுள்ளவர்களாயிருப்பது இல்லை. நம் கால் பெருவிரலைக் குறித்து நமக்கு

அக்கரை இருந்தது போல நம்மோடு இருந்தவர்களுக்கு அக்கரை இருக்கவில்லை. நம் பெருவிரல் தானே வேதனை கொடுத்தது. அவர்களது இல்லையே. பிறரின் பலவீனங்களைக் குறித்து அக்கரைக்கொண்டு கவனிக்கும் மனப்பான்மையை நாமெல்லாருமே வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் சரீரத்தில் தேவன் நரம்பு மண்டலத்தை எவ்வாறு வைத்துள்ளாரென்றால், நாமாகவே காயமுற்ற வேதனை தரும் பகுதியைக் கவனித்துப் பராமரிக்கிறோம். பிறரின் வேதனைகள் மற்றும் உணர்வுகளுக்கு எப்படி உணர்வுடை யவர்களாய் மாறுவது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்போது தான் அவர்களின் துன்பங் களில் அவர்களை நாம் போஷித்துப் பராமரிக்கமுடியும்.




*"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிற துமே மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது"* என யாக்கோபு நமக்குக் கூறுகிறார்.

சில சமயங்களில், நாம் மற்றவர்களுக்குச் செய்வது நமக்கு மிகச் சிறிய காரியமாயிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அது முக்கியமானதாயிருக்கும்:- ஒரு சந்திப்பு, ஒரு கனிவான வார்த்தை, ஒற்றைக் காலில் நடக்கும் ஒருவர் தடுமாறும்போது, அவர் விழாத படி கை நீட்டித் தாங்குதல், மற்றவர்கள் இருக்கும் நிலையில் நாம் இருந்தால், அவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டு மென விரும்பி யிருப்போமோ, அதை நாம் அவர்களுக்குச் செய்ய நினைக்கவும், செய்ய முயலவும் கற்றுக்கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம். உண்மையில், அப்படி நினைக் கிறதே பெரிய காரியம்; ஆனால் அந்த எண்ணம் ஒரு செயலாக மாற வேண்டும். *"விசுவாசம் கிரியைகளில்லா திருந்தால் தன்னில் தானே செத்ததா யிருக்கும்."* ஆகவே செயல்களற்ற எண்ணங்களும் செத்தவையே. *"ஆனால் அது ஒரு தீர்க்கதரிசியின் நாமத்தினிமித்தம் கொடுக்கப்பட்டால்,* கொடுத்தவன் *அதற்கான பலனை அடையாமற் போகமாட்டான்"* என்று இயேசு கூறுகிறார்.

ஒவ்வொருவரும் நம் சொந்த சரீரத்திற்காக அக்கறைப்படுவது போல, கிறிஸ்துவின் சரீரத்தினைப் பராமரிக்கக் கற்றுக்கொள்வோம். அப்பொழுது *"சரீரத்திலே பிரிவினை யுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்," "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறீர்கள்".*



# சாமுவேலின் பிறப்பும் வளர்ப்பும்

## சாமுவேலின் பிறப்பு (1.சாமுவேல் 1-ம் அதிகாரம்)

நமது கதை சிம்சோன் வாழ்ந்த காலத்தில் நடந்தது என்று கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் தான் ஏலி என்ற பிரதான ஆசாரியன் பொறுப்பில் ஊழியஞ்செய்தான். பெலிஸ்தியர் இஸ்ரவேலரை நாற்பது ஆண்டுகளுக்கு உபத்திரவம் பண்ணினார்கள் (நியாயாதிபதி 13:1). சிம்சோன் இஸ்ரவேலரை விடுவிக்க ஆரம்பித்தான் (வச.5). அவன் இப்படி இருபது ஆண்டுகள் தொடர்ந்தான் (நியாயாதிபதி 15:20). ஆனால் அவனுடைய மரணத்திற்குள் முழு விடுதலையும் கிடைத்திருக்கவில்லை. அது நிறைவேற மற்றொரு பெரியவன் தேவைப்பட்டது. அவன்தான் சாமுவேல் தீர்க்கதரிசி (1.சாமுவேல் 7:13).

அதற்குள்ளாக, இஸ்ரவேலர் ஒருவிதமான பொல்லாங்கும் ஒழுங்கீனமுமான ஜீவியத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஏலியும் தனது மக்களுடைய அட்டூழியத்தைக் கட்டுப்படுத்த முடியாத அளவில் வயது முதிர்ந்தவனாக இருந்தான். அவனால் ஜனங்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க இயலவில்லை. அவன் தனது கடமையில் பெரும் பலவற்றைத் தனது மக்களாகிய ஓப்னி மற்றும் பினேகாஸ் என்பவர்களிடம் விட்டுவைத்திருந்தான். ஆசாரியனின் அந்த இரண்டு மக்களும் மிகுந்த துன்மார்க்கமாய் ஜீவித்தார்கள். அவர்கள் கர்த்தருடைய வழிகளைக் குறித்து சற்றும் பயப்படவில்லை; தங்கள் இச்சைகளை மாத்திரம் நிறைவேற்றுகிறவர்களாய் இருந்தார்கள். அவர்களுடைய அக்கிரமம் இஸ்ரவேலர் நடுவில் அபகீர்த்தியாகப் பரவி, யாஹ்வே தேவனுடைய ஆராதனையைப் பேர்க்குலைச்சலாக்கியது. அதன் விளைவாக, ஜனங்கள் கவலையீனமாக மாறினர். தேவபயம் நீங்கி, விக்கிரக ஆராதனை பெருகினது. எனவே ஜனங்கள் முன்பைவிட மிக அதிகமான அக்கிரமத்தில் ஜீவித்து வந்தனர்.

அப்படிப்பட்ட மிகவும் மோசமான சூஷ்நிலையில் எல்லா நியாயாதிபதிகளைக் காட்டிலும் மிகச்சிறந்த ஒருவன் பிறந்தான். அவனால் முழு இஸ்ரவேல் ஜனத்துக்கும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாக அரசியல் பிரகாரமாகவும் பெரிய விடுதலை உண்டானது. அவனது பிறப்பு ஜெபத்திற்கு உத்தரவாக இருந்தது. அவனுடைய சிறுபிராயம் மிகவும் வித்தியாசமான சூழ்நிலையில் அமைந்தது.

## அன்னாளின் ஜெபமும் பொருத்தனையும்

பெஞ்சமீனின் ராமா என்ற ஊரில், எல்கானா என்ற லேவியன் ஒருவன் குடியிருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்தியின் பெயர் பெனின்னாள், மற்றவளின் பெயர் அன்னாள். பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளை இல்லாதிருந்தது. அது அன்னாளுக்கு மிகுந்த மனக்கிலேசத்தை அதிகரித்தது. ஒருவேளை அன்னாளின் மேலுள்ள பொறாமையினால் அவள் அப்படி பேசியிருக்கக்கூடும். ஏனெனில்

அவளுடைய கணவன் அன்னாளை மிக அதிகமாய் நேசித்து, "பத்து குமாரரைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா?" என்றான்.

எல்கானா யாஹ்வே தேவனுக்கு உண்மையாயிருந்தான். அதனால் தனது குடும்பத்தார் அனைவரையும் அவரைத் தொழுதுகொள்ளும்படி அழைத்துச் செல்வான். ஒவ்வொரு வருஷமும் குடும்பமாக சீலோவுக்குப் பயணமாகச் சென்று, அங்குள்ள பரிசுத்த கூடாரத்துக்குப் போய் உஆஹ்வே தேவனிடம் ஜெபித்து தங்கள் காணிக்கைகளை அவருக்குச் செலுத்துவதுண்டு. அது எல்லோருக்குமே மனமகிழ்ச்சியான கொண்டாட்டத்தின் சமயமாக இருந்தாலும், அன்னாளுக்கு விசனத்தின் நாட்களாக இருந்தது. ஏனெனில் பெனின்னாள் தனது குமாரரும், குமாரத்திகளும் தன்னோடு வைத்திருந்து சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவர்களைக் கொண்டு அவளுக்கு எதிரில் ஜெம்பம் பேசி, அவளைக் கேலிபண்ணி, அவள் மலடி என்று சுட்டிக்காட்டி அவளைக் கிலேசப்படுத்தினாள்.

பிள்ளைகள் அவளைச் சுற்றியிருக்க, பெனின்னாள் அன்னாளைப் பரியாசம் பண்ணி, அவளைத் துக்கப்படுத்தினாள்.

ஆதலால் பண்டிகையின்போது அவள் மகிழுவதற்குப் பதிலாக, அழுதுகொண்டு, சாப்பிடாமலிருந்தாள்.

ஆயினும், அன்னாள் விசுவாசமுள்ளவளாக இருந்தபடியால், தனது பிரச்சனையை ஊக்கமான ஜெபத்தில் வைத்தாள். அவள் யாஹ்வே தேவனிடம் ஒரு ஆண் பிள்ளையைக் கொடுக்கும்படி வேண்டினாள். அவள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் நின்று தனது இருதயத்தைத் தேவனிடம் ஊற்றினாள். அங்கு தான் பிரதான ஆசாரியனான ஏலி தனது நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவள் தேவனிடம் ஜெபிக்கையில், தன் வேண்டுதலை அவர் நிறைவேற்றினால், "உயிரோடிருக்கும் நாளெல்லாம் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்" என்று ஒரு பொருத்தனை பண்ணினாள் (1.சாமுவேல் 1:11). சிம்சோனைப் போல், அவனும் நசரேயனாக, தேவனுக்கென்று பிரிக்கப்பட்டிருப்பான். அதன் அடையாளமாக அவனுடைய முடிவெட்டப்படாமல் வளரவிடப்படும்.



அன்னாள் தனது ஜெபத்தில் தனது முழுமையையும் ஊற்றினாள். அவள் ஒரு பொது இடத்தில் தான் இருப்பதையும் மற்றவர்களைத் தன்னைப் பார்ப்பார்களே என்றும் அவர் நினைக்கவில்லை. தனது சூழ்நிலையை மறந்தவளாக ஆழ்ந்த ஆர்வம் கொண்டவளாக நீண்ட நேரம் ஜெபித்தாள். தனது இருதயத்தின் வேண்டுதலைத் தேவன் தருவதற்காக மன்றாடினாள் (வச.12).



பிரதான ஆசாரியனாகிய ஏலி அவளைக் கவனித்தான். அவள் செய்வது குறித்து அவன் கண்டு அதை வெறுத்தான். அன்னாள் அமைதலாக ஜெபித்துக் கொநுறா ருந்தாள். அவள் தனது வேண்டுத லைத் தேவனிடம் தெரியப்படுத்திக் கொண்டிருந்தாள். ஏலிக்கு அது தெரியவில்லை. அவள் மிகவும் நொந்தவளாக அவன் கண்டான். அவளுடைய தோற்றம் அலங்கோலமாக அவனுக்குத் தெரிந்தது. அவளுடைய உதடுகள் மட்டும் அசைவதை அவன் பார்த்தான். அவள் மது குடித்திருக்கிறாள் என்று அவன் நினைத்தான். ஏனெனில், அன்றைய ஆராதனை அவ்வளவு தூரத்துக்குத் தரம் குறைந்திருந்தது; ஆராதனைக்கு வருகிறவர்கள் மது அருந்திவிட்டு வருவது பழக்கமாகியிருந்தது. எனவே அவளைக் கடுமையாகச் சாடினான். தேவாலயத்துக்கு வருவதாக இருந்தால் திராட்சைரசம் குடித்து வெறித்தி ருப்பதை நிறுத்து என்று கட்டளையிட்டான்.

ஆனால் அன்னாள் தாழ்மையுடன், அவன் பேசின பேச்சு தவறானது என்று உணர்த்தினாள். அவள் தனது ஜெபத்தின் நோக்கத்தையும் தனது இருதயத்தின் வாஞ்சையையும் தெரிவித்தாள். இப்போது, அவள் மிகுந்த தேவபக்தியுள்ளவள் என்று ஏலி அறிந்து, அவளுடைய ஜெபத்துடன் தானும் சேர்ந்து ஜெபித்து "இஸ்ரவேலின் தேவனிடம் நீ கேட்ட வேண்டுதலை அவர் உனக்கு அருளிச் செய்வார்" என்றான்.

தேவன் அவளுடைய வேண்டுதலுக்குப் பதிலளித்தாள். அவனுக்குச் "சாமுவேல்" என்று பேரிட்டனர். அதாவது "தேவனுடைய நாமம்" என்று பொருள்படும். புதிதாகப் பிறந்த குழந்தையுடன் தேவன் இருந்ததாயும், தனது குடும்பத்தில் நடந்த சம்பவங்களை யெல்லாம் தனது சிந்தைக்கு அப்பாற்பட்டதாயும் இருப்பதாக உணர்ந்தாள், எல்கானா. பிள்ளை பால் மறக்கும்வரை வருடாந்திர பயணமாக அன்னாள் போகவேண்டுவ தில்லை என்று அவன் ஒப்புக்கொண்டான். பெனின்னாளைப் பொறுத்த மட்டி, இனிமேலும் அன்னாளைப் பரியாசம் பண்ணுவது அடியோடு நின்றது.

## சாமுவேலைத் தேவாலயத்துக்கு அழைத்துச் செல்லுதல்

அந்தக் காலத்தில் குழந்தைகள் ஏறக்குறைய மூன்று வயது வரை முலைப்பால் மறக்கச் செய்வதில்லை. (2.நாளாகமம் 31:16). அந்த நாட்கள் நிறைவேறி வந்தபோது அன்னாள் தனக்குக் கிதைத்த விலையேறப்பெற்ற ஈவை விட்டுப் பிரிய ஆயத்தமா னாள். அந்தச் சிறிய குடும்பம் தேவையான அனைத்தையும் சேகரித்து ராமாவை விட்டுப் போனார்கள். அவற்றில் ஒன்று மூன்று வயதான காளைமாடு ஆகும். சாமுவேலைப் பிரதிஷ்டைச் செய்யும் பலிக்கென்று அது அழைத்துச் செல்லப்பட்டது.

மறுபடியும் அன்னாள் ஏலியின் முன் தோன்றினாள். ஆனாலும் இப்போது



அவன் தனது உள்ளத்தில் சந்தோஷப்பட்டு சிரிக்கிற முகத்துடன் காணப்பட்ட ஒரு பெண்ணைக் கண்டாள். யாஹ்வே கர்த்த ரிடத்தில் தான் பிரத்கினை செய்தபடியே, அவரிடத்திலிருந்து பெற்றதை அவரிடம் திரும்பக் கொடுக்கிற உண்மையுள்ள ஒரு ஸ்திரீயை அவளில் கண்டான். மிகுந்த மனோவாஞ்சையோடு அவள் தான் வந்த நோக்கத்தைப் பிரதான ஆசாரியனிடம் எடுத்துரைத்தாள், “என் ஆண்டவனே, இங்கே நின்று, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணின ஸ்திரீ நான்தான். இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்னினேன். அதன்படி கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார். அகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன்” என்றாள்.

அந்தச் சமயத்தில், கர்த்தருடைய சந்நிதியில் களிகூர்ந்து, அந்த குடும்பம் சாமுவேலுக்கென்று செலுத்தின பலியின் புகை வானத்தில் ஏறுவதைக் கண்டவர் களாய், ஒன்றாக விருந்து சாப்பிட்டார்கள். பிரதிஷ்டையின் சடங்காச்சாரம் முடிந்த வுடன் சாமுவேலுக்கு சாதாரண உடை உடுத்தி அவனை ஏலியின் பொறுப்பில் ஒப்படைத்தனர். அப்போது அன்னாள் சர்வவல்ல தேவனிடம் அன்பும் நன்றியும் நிறைந்தவளாய், அவருடைய ஆவி அவள்மேல் இறங்க, தனது மகிழ்ச்சியை தீர்க்கதரிசனமாக ஒரு துதிபாடலாகப் பாடினாள். அது க.சாமுவேல் உ-ல் எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் பிறப்பிற்கு முன்னால் மரியாள் பாடின துதிப் பாடலைப் போலவே அன்னாளின் கீதமும் இருந்தது (லூக்கா 1:46-55). வேதாகமத்தில் முதல் முறையாக மேசியா ராஜா (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) வரப்போவது குறித்து பேசப்பட்டுள்ளது (1.சாமுவேல் 2:10). அன்னாளின் துதிபாடல் யாஹ்வே தேவனின் மகத்துவம் குறித்தும், அவர் மேட்டிமையானவர்களைத் தாழ்த்தி எப்படி தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார் என்றும், அவர் எவ்வாறு நீதிமான்களை உயர்த்தி, பொல்லாங்கரை தேசீய தண்டனையின் மூலம் சிட்சிக்கிறார் என்றும் பாடினாள். அவர் எப்படி தம்முடைய ராஜ்யத்தை இந்தப் பூமியில் நிலைநாட்டுகிறார் என்றும் பாடினாள்.

இப்படிப்பட்ட உன்னதமான ஒரு கீதம் பாடி தேவனை, மகிமைப்படுத்தின பின்பு, அன்னாள் தனது குமாரனான சாமுவேலை ஏலியினண்டையில் கர்த்தருக்கென்று ஒப்படைத்துவிட்டு, எல்கானாவுடன் ராமா என்னும் தங்களுடைய ஊருக்குத் திரும்பிப் போனாள்.

அந்தச் சிறுவனை இளம்பிராயத்தில் அவனை விட்டுவிட்டவர்கள் பின்பு



அவன் தேவசேவையில் எவ்வளவு பெரியளவில் தேவாலயப் பணிகளில் ஈடுபட்டான் என்பதைச் சற்றும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இஸ்ரவேலின் எதிர்காலத்தையே பாதிக்குமளவில் அவன் செயல்பட்டான்.

இன்றைய சீலோ -ஒப்னே மற்றும் பினேகாஸின் அட்டூழியங்களின் விளைவாக இந்தவிதமான இடிபாடுகளுக்கு ஆளாயிற்று. எரேமியா 7:12 காண்க.

## அன்னாள் மற்றும் மரியாளின் கீதங்கள் ஒப்பிடுதல்

காபிரியேல் மரியாளிடம், அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவர் மனுக்குலத்தின் இரட்சகராக இருப்பார் என்று சொன்னபோது, மரியாள் பாடின கீதமும், சாமுவேலின் பிறப்பின்போது அன்னாள் பாடின கீதமும் ஏறக்குறைய ஒரே மாதிரி உள்ளது (1.சாமுவேல் 2:1-10; லூக்கா 1:46-55).

## அன்னாள் பாடின வெற்றியின் கீதம்

*யாஹ்வே தேவனின் இரட்சிப்பில் மகிழ்ந்து (வ-1).*

என் இருதயம் கர்த்தருக்குள் களிகூறுகிறது. என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந் திருக்கிறது. என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது. உம்முடைய இரட்சிப்பி னாலே சந்தோஷப்படுகிறேன்.

அவர் பெருமையுள்ளவர்களை அதட்டி தாழ்மையுள்ளவர்களை இரட்சிக்கிறார் (வ.3-5).

இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள். அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்.

## மரியாளின் துதிகீதம்

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிறுகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார் கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்.

அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்தவர்களுக்குத் தலைமுறை தலைமுறை தலை முறைக்குமுள்ளது.

*கர்த்தர் என்ற யாஹ்வே ஞானமுள்ள தேவன் (ஏல்)*

அவர் செய்கையின் யதார்த்தமல்லவோ?

பலவான்களின் வில் முறிந்தது.

தள்ளாடினவர்களோ பலத்தினால் இடைக்கட்டப்பட்டார்கள். திருப்தியாயிருந்தவர்கள் அப்பத்துக்காக கூலிவேலை செய்கிறார்கள்.

பசியாயிருந்தவர்கள் இனி பசியாயிரார்கள். மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள். அநேகம் பிள்ளைகளைப் பெற்றவளோ பலட்சியப் பட்டாள்.

*அவர் தமது பரிசுத்தவான்களை உயர்த்துவார் (வச-6-8).*

கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்.

அவரே பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறார்.

கர்த்தராகிய யாஹ்வே தரித்திரம் அடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையப் பண்ணுகிறவருமாயிருக்கிறார். அவர் தாழ்த்துகிற வருமாயிருக்கிறார்.

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்து கிறார். அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். பூமியின் அஸ்திபாரங்கள் யாஹ்வே கர்த்தருடைய வைகள் அவரே அவைகளின்மேல் பூச்சகரத்தை வைத்தார்.

*வரப்போகும் தேசீய நியாயத்தீர்ப்புகள் (வச.9-10).*

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். துன்மார்க்கர் இருளிலே மௌனமாவார்கள். பெலத்தினால் ஒருவனும் மேற்கொள்ளுவதில்லை.

கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள். வானத்திலிருந்து அவர்கள் மேல் முழங்குவார். கர்த்தர் பூமியின் கடையாந்திரங்களை நியாயந்தீர்த்து, தாம் ஏற்படுத்தின ராஜாவுக்குப் பெலன் அளித்து, தாம் அபிஷேகம் பண்ணின கிறிஸ்துவின் கொம்பை உயரப்பண்ணுவார்.

## தம்முடைய புயத்தினாலே பராக்கிரமம் செய்தார்.

இருதயத்தில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களி லிருந்து தள்ளி, தாழ்மையானவர் களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ள வர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம் செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

தனது பாடல் மூலமாக அன்னாள் தன்னை ஒரு தீர்க்கதரிசினியாக வெளிப்படுத்தி யுள்ளார். தனது எதிரியின் எதிர்ப்புக்கு அப்பால் அவள் நோக்கினாள். பெனின்னாளின் பழைய ஏற்பாட்டின் இரு ஸ்திரீகளின் நடுவே பெரும் எதிர்ப்பைத் தூண்டினாலும் மேசியா கிறிஸ்துவின் வெற்றி முடிவில் தோன்றினது.

இந்த வேதபகுதியில் தான் வேதாகமத்திலேயே முதன்முறையாக மேசியாவான கிறிஸ்து ராஜாவைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. இது அன்னாளின் ஆவிக்குரிய நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.